யா-கொக்குவில் ஸ்ரீ ஞானபண்டித வித்தியாசாலை

# யா/கொக்குவில் ஸ்ரீஞானபண்டித வித்தியாசாலை

# நிறுவுனர் தினமும் பரிசளிப்பு விழாவும் ~ 2014.

இடம்: வித்தியாசாலைக் கலையரங்கம்

நேரம்: 18.10.2014 சனிக்கிழமை(மாலை 2.00 மணி)

பிரதம விருந்தினர்

திரு.அருணாசலம் அகிலதாஸ்

(கோட்டக் கல்விப் பணிப்பாளர், நல்லூர்)

சிறப்பு விருந்தினர்

திரு.செல்லையா இளங்கோ

(அதிபர், யா/கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம்)

கௌரவ விருந்தினர்

திருமதி சோபனாதேவி மகாலிங்கம்

(முன்னாள் உபஅதிபர்)

(யா/கொக்குவில் ஸ்ரீஞானபண்டிதா வித்தியாசாலை)

# நிகழ்ச்சி நிரல்

1. மாலை அணிவித்து விருந்தினரை வரவேற்றல்
2. மங்கல விளக்கேற்றல்
3. இறை வணக்கம்
4. தமிழ்த்தாய் வாழ்த்து
5. நிறுவுனர் உருவப்படத்திற்கு வணக்கம் செலுத்துதல்
6. வரவேற்பு நடனம்
7. வரவேற்புரை
8. அதிபரின் பரிசுத்தின அறிக்கை
9. **Recitation - Grade 4**
10. பேச்சு - தரம் 11
11. நடனம் - தரம் 7
12. பிரதம விருந்தினர் உரை
13. **Action Song - Grade 6 Boys**
14. குழுப்பாடல்
15. சிறப்பு விருந்தினர் உரை
16. **Recitation - Grade 5**
17. குழுப்பாடல்
18. கௌரவ விருந்தினர் உரை
19. **Group Song - Grade 10**
20. பரிசில் வழங்கல்
21. நன்றியுரை
22. பாடசாலைக் கீதம்

# பரிசுத்தின அதிபர் அறிக்கை

அகிலம் எல்லாம் ஞான ஒளியைப் பரப்பிக் கொண்டிருக்கும் எமது பாடசாலையின் ஞானவைரவப் பெருமானின் திருவடிகளைப் பணிந்து,

இன்றைய இப்பொன்னான நாளில் எமது பரிசளிப்பு விழாவிற்கு பல்வேறு சிரமங்களின் மத்தியிலும் பிரதம விருந்தினராக வருகை தந்து விழாவைச் சிறப்பித்துக் கொண்டிருக்கும் பெருமதிப்பிற்குரிய கோட்டக் கல்விப் பணிப்பாளர் திரு. அருணாசலம் அகிலதாஸ் அவர்களே! அவர்தம் பாரியார் அவர்களே!

எமக்கு ஆக்கமும் ஊக்கமும் தந்து இவ்விழாவை உயிரோட்டமாக்கிக் கொண்டிருக்கும் சிறப்பு விருந்தினரும் எமது பாடசாலையின் முன்னாள் அதிபரும் தற்போதய யா/ கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலய அதிபருமான மதிப்பிற்குரிய திரு. செல்லையா இளங்கோ அவர்களே!

கௌரவ விருந்தினராக வருகை தந்து விழாவை மெருகூட்டிக் கொண்டிருக்கும் எமது பாடசாலை முன்னாள் உபஅதிபரும் பாடசாலை நலன்களில் தொடர்ந்து அக்கறை கொண்டிருக்கும் திருமதி சோபனாதேவி மகாலிங்கம் அவர்களே!
மற்றும்

- ஏனைய பாடசாலை அதிபர்களே! ஆசிரியர்களே!
- கல்வித்திணைக்கள அதிகாரிகளே!
- இவ்விழாவைச் சிறப்பிக்க வந்திருக்கும் முன்னாள் அதிபர்களே! ஆசிரியர்களே!
- பெற்றோர்களே! நலன்விரும்பிகளே!
- அபிவிருத்திச் சங்க உறுப்பினர்களே!
- பாடசாலையின் வளர்ச்சிக்காக அயராது செயலாற்றிக் கொண்டிருக்கும் எனது ஆசிரியப் பெருந்தகைகளே!
- நாட்டின் எதிர்காலச் சிற்பிகளாகத் துடித்துக்கொண்டிருக்கும் மாணவச் செல்வங்களே!

அனைவருக்கும் எனது மதிய வணக்கத்தை தெரிவித்து மனமகிழ்ச்சியுடன் இருகரம் கூப்பி வருக வருக என வரவேற்பதில் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

பிரதம விருந்தினராக வருகை தந்து சிறப்பித்துக் கொண்டிருக்கும் உயர் திரு.அ. அகிலதாஸ் அவர்கள் தனது ஆரம்பக் கல்வியை யா/ ஒட்டுவெளி அமெரிக்கமிசன் தமிழ்க்கலவன் பாடசாலையிலும் இடை நிலைக்கல்வியை யா/உசன் இராமநாதன் மகா வித்தியாலயத்திலும் பட்டப்படிப்பு, பட்டப்பின் படிப்புகளை யாழ்ப்பாணப்பல்கலைக் கழகத்திலும் மேற்கொண்டிருந்தார்.

இவர் தனது முதல் ஆசிரிய நியமனத்தை 1984 இல் புத்தளம் மாவட்டத்தில் புத்தளம்/ அல் அக்ஷா தேசிய பாடசாலையிலும் தொடர்ந்து யாழ்மாவட்டத்தில், யா/உ-சன் இராமநாதன்மகா வித்தியாலயத்திலும் கடமையாற்றினார்.

1991இல் அதிபா சேவை தரம் II இற்கு தெரிவு செய்யப்பட்டு தான் கல்வி கற்ற பாடசாலையிலேயே பிரதி அதிபராகத் தனது முதற்கடமையைப் பொறுப்பேற்றார். இதனைத் தொடர்ந்து

1994 – 2000 ஆண்டு வரை யா/ கச்சாய் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையின் அதிபராகக் கடமையாற்றினார். இதனைத் தொடர்ந்து 2000ஆம் ஆண்டு தொடக்கம் யா/கோப்பாய் மகாவித்தியாலயத்திலும் யா/ கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியிலும் மிகச் சிறப்பாக தனது சேவையை மேற்கொண்டார்.

2007ஆம் ஆண்டு தொடக்கம் 2012ஆம் ஆண்டுவரை யா/ கொக்குவில் இந்துக் கல்லூரியின் அதிபராகச் செயற்பட்டு அப்பாடசாலையின் வரலாற்றில் என்றுமில்லாதவாறு பரீட்சைப் பெறுபேறுகளாலும் பௌதிக வள அபிவிருத்தியாலும் அக்கல்லூரியை மிக உயர்ந்த நிலைக்கு இட்டுச் சென்றுள்ளமை பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டியதாகும்.

இவ்வாறான இவரின் அயராத முயற்சியாலும் சமூகத்திற்கு ஆற்றிய சேவையாலும் கல்வித்திணைக்களம் இவரின் ஆற்றலைக் கண்டு இவரை தென்மராட்சி கல்வி வலய பிலதிக்கல்விப் பணிப்பாளராகவும் (மாணவர் அபிவிருத்தி) தீவக கல்வி வலய திட்டமிடல் பணிப்பாளராகவும் பதவி உயர்வு வழங்கியதுடன் தற்போது எமது நல்லூர்க் கோட்டக் கல்விப் பணிப்பாளராகவும் சிறப்பாக செயற்ப்பட்டு வருகின்றமை இங்கு குறிப்பிடத்தக்கது.

சிறப்பு விருந்தினராக எமது அழைப்பை ஏற்று வருகை தந்திருக்கும் எமது பாடசாலையின் முன்னாள் அதிபரும் தற்போதய யா/ கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய அதிபருமாகிய உயர்திரு செல்லையா இளங்கோ அவர்கள் தனது ஆரம்பக் கல்வியை கிளி / உருத்திரபுரம் மகாவித்தியாலயத்திலும், இடைநிலைக் கல்வியை யாழ் இந்துக் கல்லூரியிலும் பட்டப்படிப்புக்களை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலும் மேற்கொண்டிருந்தார்.

இவர் தனது முதல் ஆசிரிய நியமனத்தை 1987 இல் கிளி/அக்கராயன் மகாவித்தியாலயத்திலும் அதனைத் தொடர்ந்து 1990 – 1991 வரை பலாலி ஆசிரிய கலாசாலைப் பயிற்சியையும் 1993 – 1998 வரை அக்கராயன் மகா வித்தியாலய பிரதி அதிபராகவும், 1999 – 1998 வரை யா/ கொக்குவில் இந்துக் கல்லூரியில் ஆசிரியராகவும் கடமையாற்றினார்.

2009 இல் இலங்கை அதிபர் சேவை தரம் II இற்கு தெரிவு செய்யப்பட்டு தனது முதல் அதிபர் கடமையை எமது பாடசாலையான யா/கொக்குவில் ஸ்ரீ ஞானபண்டிதா வித்தியாசாலையில் மேற் கொண்டிருந்தார்.

இவர் தனது பதவிக்காலத்தில் பாடசாலையின் கல்வி வளர்ச்சியிலும் பௌதிக வளஅபிவிருத்தியிலும் கூடிய கவனம் செலுத்தி பாடசாலையை சமூகத்தின் உயிரோட்டமான ஓர் நிறுவனமாக மிளிரச் செய்த பெருமை இவரையே சாரும். இவரது அரிய முயற்சியினால் காத்திரமான ஓர் கணிணிக்கூடம், சமையல் அறை, நீர்த்தாங்கி, மண்டப மின் இணைப்பு, விளையாட்டு முற்றம், கட்டடங்களுக்கு வர்ணம் பூசுசல் என்பன சிறப்பாக உருவாக்கப்பட்டு இன்றும் நல்ல முறையில் இயங்கி வருவது அவரின் சேவைக்கு கிடைத்த நற்சான்றாகும்.

இவ்வாறு பல்வேறு பௌதிக வளங்களும் கற்றலுக்கான சூழலையும் ஏற்படுத்தியது மட்டுமில்லாமல் ஞானபண்டிதாவை சமூகத்துடனான உயிரோட்டமுள்ள பாடசாலையாக மிளிரச் செய்த பெருமை திரு இளங்கோ அவர்களையே சாரும். ஏனெனில் பழைய மாணவர் சங்கம் ஒன்றை உருவாக்கியமை விளையாட்டுப் போட்டியை சிறப்பாக நடாத்தி சமூகத்தின் பாராட்டையும் பெற்றுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு அவரின் செயற்பாட்டை அறிந்த கல்வித்திணைகளம் அவருக்கு தரம் - II பாடசாலையில் இருந்து 1 C பாடசாலைக்கு இடமாற்றம் வழங்கியது. தற்போது நவோதய பாடசாலை யா/ கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தின் சிறந்த அதிபராகக் கடமையாற்றி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

அடுத்து கௌரவ விருந்தினராக வருகை தந்து சிறப்பித்துக் கொண்டிருக்கும் எமது பாடசாலையின் முன்னாள் உப அதிபரான திருமதி சோபனாதேவி மகாலிங்கம் அவர்கள் ஓய்வு பெற்றுச் சென்றாலும் தனது பணியில் எமது பாடசாலையின் வளர்ச்சிக்காக ஓய்வு பெறாது தொடர்ந்தும் பாடுபட்டுக் கொண்டிருக்கின்றமை இங்கு குறிப்பிடத்தக்கது.

இவர் தனது ஆரம்பக்கல்வி தொடக்கம் உயர்கல்வி வரை யாழ் கொக்குவில் இந்துக் கல்லூரியிலும், பட்டப்படிப்பை பேராதனைப் பல்கலைக் கழகத்திலும், பட்டப்பின் கல்வி டிப்ளோமாவை யாழ் பல்கலைக்கழகத்திலும் மேற்கொண்டிருந்தார்.

இவர் தனது முதல் ஆசிரிய நியமனத்தை 1977 இல் யா/அச்சுவேலி மகாவித்தியாலயத்திலும் அதனைத் தொடர்ந்து 1978 – 2007ஆம் ஆண்டு வரை யா/ கொக்குவில் ஸ்ரீ ஞானபண்டித வித்தியாசாலையில் 8 வருடம் ஆசிரியராகவும் 21 வருடங்கள் உப அதிபராகவும் கடமையாற்றி 2007 ஆண்டு ஓய்வு பெற்றார்.

இவர் எமது பாடசாலையில் கடமையாற்றிய காலத்தில் மாணவரின் கல்வி வளர்ச்சியிலும், ஒழுக்கத்திலும் மிகுந்த கரிசனை காட்டி, நிர்வாக விடயங்களுக்கும் தன்னிலான உதவிகளைச்

செய்து வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. இவர் தனது வீட்டை விடவும் பாடசாலையே மிகவும் நேசித்த ஒரு ஆசிரியப் பெருந்தகையாவார்.

மேலும் இப்பாடசாலையின் வளர்ச்சிக்கு பல்வேறு வழிகளிலும் ஆலோசனைகளையும் வழங்கி ஆக்கமும் ஊக்கமும் தந்து கொண்டிருக்கும் எமது கல்வித் திணைக்கள அதிகாரிகளையும் இருகரம் கூப்பி வருக வருக என வரவேற்கின்றேன்.

மற்றும் இவ்விழாவை மெருகூட்ட வந்திருக்கும் முன்னாள் அதிபர்கள் ஆசிரியர்கள் அனைவரையும் வருக வருக என வரவேற்றபதில் பெருமகிழ்ச்சியடைகிறேன். எமது பாடசாலையின் வளர்ச்சிக்காக அயராது பாடுபட்ட அதிபர்கள் மற்றும் ஆசிரியர்களின் சேவையையும் இச் சந்தர்ப்பத்தில் நினைவு கூர்ந்து எனது மனமார்ந்த பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அத்துடன் பழைய மாணவர்கள் நலன் விரும்பிகள் பெற்றோர்கள் அனைவரையும் வருக வருக என வரவேற்பதில் உவகை அடைகின்றேன்.

இத்துடன் எமது பாடசாலையை உயிரோட்டமாக்கிக் கொண்டிருக்கும் எமது பாடசாலையின் ஆசிரியர்களின் சேவையையும் இச்சந்தர்ப்பத்தில் மனநிறைவுடன் பாராட்டி அறிக்கையை உங்கள் முன் சமர்ப்பிப்பதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

எமது பாடசாலையான யா/ கொக்குவில் ஸ்ரீ ஞானபண்டித வித்தியாசாலை தரம் 1 தொடக்கம் தரம் 11 வரையான வகுப்புக்களைக் கொண்ட ஓர் இடைநிலைப் பாடசாலையாகும். [Type II School]

இங்கு வாழும் மாணவர்களில் அனேகமானோர் வறுமைக் கோட்டின் கீழ் வாழ்பவர்களாகவும் தாய் அல்லது தந்தையரை இழந்தவராகவும் காணப்படுகின்றனர். அத்துடன் இவர்களில் விசேட தேவைக்குரிய மாணவர்களும் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

மேலும் இவ்வாறான சூழ்நிலை கொண்ட எமது பாடசாலை மாணவர்களின் பொதுப்பரீட்சை பெறுபேற்றை, சித்திவீதத்தை அதிகரிக்கும் நோக்குடன் பாடசாலை கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளுக்கு மேலதிகமாக காலை, மாலை, சனி, ஞாயிறு விடுமுறை நாட்களிலும் மேலதிக கற்பித்தல் செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றமை இங்கு குறிப்பிடத்தக்கது.

அத்துடன் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்குரிய மாணவர்களுக்கு விசேட வகுப்புக்கள் நடாத்தப்பட்டு மாணவர்களின் அடிப்படைத் தேர்ச்சிக் கற்றல் செயற்பாடுகளும் முன்னெடுத்துச் செல்லப்படுகினறமை இங்கு சுட்டிக்காட்டத் தக்கது.

மேலும் எமது பாடசாலையின் பாரிய குறைபாடாக விளையாட்டு மைதானம் இல்லாது காணப்படுகின்றது. எனினும் அதிபரின் அயராத முயற்சியினால் முதற்தடவையாக கடந்த வருடம் பூப்பந்து [Badminton] 15 வயது பிரிவு அணி ஒன்று உருவாக்கப்பட்டு வலயமட்டத்தில் வெற்றி பெற்றதோடு மாகாண மட்டத்தில் 2ஆம் சுற்றிற்கும் முன்னேறியமை குறிப்பிடத்தக்கது.

அதேபோன்று எமது பாடசாலையில் முதற் தடவையாக உள்ளக விளையாட்டான சதுரங்கம் [Chess] திருமதி. ம. சத்தியசீலன் ஆகிய இருவராலும் ஆசிரியர் அவர்களால் ஆரம்பிக்கப்பட்டதுடன் இவருடன் இணைந்து திருமதி அ.சுதர்சன் அவர்களும் மாணவர்களை வழிநடத்தி வருகின்றனர். மாணவர்கள் பல்வேறு போட்டிகளிலும் பங்கு பற்றி வெற்றியீட்டி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. இந்த வருடம் நடைபெற்ற ஆளுநர் விருதிற்கான சதுரங்கப் போட்டியில் கோட்ட மட்டத்தில் இடம்பெற்று வலயமட்டத்திற்கு ஒரு மாணவி தெரிவு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. இதற்கான பயிற்சியை வழங்கிய இருவருக்கும் எனது பாராட்டுக்களையும் நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு ஆண்கள் கரம் அணியைத் திரு.நி.நவநீதகுமரன் ஆசிரியர் அவர்கள் வழிநடத்துவதையும், பெண்கள் கரம் அணியை திருமதி சு.சோமேஸ்வரன் அவர்கள் வழிநடத்துவதையும் பாராட்டி நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

மேலும் எமது பாடசாலையின் முதற்தடவையாக கடந்த வருடம் க.பொ.த. (சா.த) பரீட்சை எடுக்கும் மாணவர்களுக்காக குடியுரிமைக்கல்வியும் மற்றும் சமூக நிர்வாகமும் என்ற பாடம் அறிமுகப்படுத்தப்பட்டு அப்பாடத்திற்கு தோற்றிய அனைத்து மாணவர்களும் சித்திபெற்று 100% அடைவை எட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது. இச்சந்தர்ப்பத்தில் அந்த மாணவர்களுக்கு வழிகாட்டி கற்பித்த திருமதி . ப. சற்குணமூர்த்தி ஆசிரியர் அவர்களுக்கு எனது பாராட்டையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அத்துடன் எமது பாடசாலை மாணவர்களுக்கு கல்விக்கான கள ஊக்குவிப்பையும் ஆளுமை விருத்தியை ஏற்படுத்தவும் நேரடி அனுபவக் கல்வியைப் பெறும் பொருட்டு பல்வேறு சிரமங்களின் மத்தியிலும் திருமதி.ஞா. இராஜேந்திர குமார் தலைமையில் அதிபரின் வழிகாட்டலுக்கு அமைவாக கல்விச் சுற்றுலா ஒன்றை மேற்கொண்டு வலராற்றுப் புகழ்மிக்க இடங்களை மாணவர்கள் பார்வையிட்டு வந்தமையும் இச்சந்தர்ப்பத்தில் குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

பாடசாலை மாணவர் தொகை

தரம் 1 தொடக்கம் 11 வரை

| | | |
|---|---|---|
| ஆண்கள் | 112 | |
| பெண்கள் | 70 | |
| மொத்தம் | 182 | மாணவர்கள் கல்வி பயில்கின்றனர். |

# முகாமைத்துவக் கட்டமைப்பு

| | | |
|---|---|---|
| அதிபர் | : | திரு. N. கந்தவனச்செல்வன் |
| பிரதி அதிபர் | : | திரு. K. சாந்தகுமார் |
| பாடசாலை முகாமைத்துவ குழு | : | திரு. N. கந்தவனச்செல்வன்<br>திரு. K. சாந்தகுமார்<br>திருமதி. ச. கனகராசா<br>திருமதி.ஞா. இராஜேந்திரகுமார்<br>திருமதி. ரோ. இராசதுரை |
| உள்ளக மேற்பார்வை | : | திரு.N.கந்தவனச்செல்வன்<br>திருமதி.ஞா.இராஜேந்திரகுமார்<br>திருமதி.சோ.இராசதுரை |
| விசேட தேவை | : | திருமதி. ச. நாகதீபா |
| வழிகாட்டலும் ஆலோசனையும் | : | திருமதி. ம. சத்தியசீலன் |

துணை அணியினர்:

எமது பாடசாலையின் வளர்ச்சிக்காக அரும்பாடுபட்டுக் கொண்டிருக்கும் பாடசாலை பாதுகாப்புக்குப் பொறுப்பான திரு. ப. நிரஞ்சன் அவர்களின் சேவையையும் இச்சந்தர்ப்பத்தில் நினைவு கூர்ந்து பாராட்டுகின்றேன். அத்துடன் இவரிற்கு பதிற்கடமைக்காகச் சேவையாற்றும் திரு.வி.செல்வராஜா அவர்களின் சேவையையும் பாராட்டுகின்றேன்.

# J/ KOKKUVIL SRI GNANA PANDITHA VIDYASALAI

## STAFF LIST – 2014

| PERMANENT TEACHERS | | SUBJECT |
|---|---|---|
| 1. MR. N. KANTHVANACHELVAN | - | PRINCIPAL |
| 2. MR. K. SHANTHAKUMAR | - | VICE PRINCIPAL |
| 3. MRS. G. RAJENDRAKUMAR | - | MATHEMATICS |
| 4. MRS. S. KANAGARAJA | - | TEACHER LIBRARIAN, EMIS |
| 5. MRS.T.RAJATHURAI | - | PRIMARY |
| 6. MRS.P.KURUCHANDRANATHAN | - | PRIMARY |
| 7. MRS. G. SAYANTHARAJAN | - | SCIENCE |
| 8. MRS. P. SATKUNAMOORTHY | - | TAMIL |
| 9. MRS.V.NANTHAKUMAR | - | PRIMARY |
| 10. MRS.S.NAVANEETHAN | - | HISTORY,<br>TEACHER LIBRARIAN |
| 11. MRS.A.SUTHRSHAN | - | ENGLISH |
| 12. MRS.M.SATHYJASEELAN | - | COMMERCE |
| 13. MR.N.NAVANEETHAKUMARAN | - | HISTORY |
| 14. MR.S.SIVALINGAM | - | ICT (03 Days) |
| 15. MRS.V.KAJENDRAN | - | DANCE (03 Days) |
| 16. MRS.S.NAGATHEEPA | - | MUSIC |
| 17. MRS.A.THIVAHARAN | - | PRIMARY |
| 18. MRS.N.SURESH | - | PRIMARY |
| 19. MRS. S. SOMESWARAN | - | PRIMARY |

| PART TIME TEACHERS | | SUBJECT |
|---|---|---|
| 1. MRS. P. KAMALESWARASARMA | - | COMMERCE (02 Days) |
| 2. MRS. S. SELVARAJA | - | HOMEE CONOMIC (02 Days) |
| 3. MR. A.VOLVIN | - | ART (02 Days) |

| ATTACHMENT | | SUBJECT |
|---|---|---|
| MRS.S.KANTHARUBAN | - | MUSIC |

## இடமாற்றம் பெற்றுச் சென்றோர்

1. திருமதி. S. மயூருதன்
2. திருமதி. M. தயாநிதி
3. திருமதி. சு ஜெகசுதன்
4. திரு. S. அருள்ராஜன்

## இடமாற்றம் பெற்று எமது பாடசாலையில் இணைந்தோர்.

1. திருமதி. ச.நாகதீபா
2. திரு. நி. நவநீதகுமரன்
3. திருமதி. அ. திவாகரன்
4. திரு. தெ. வோல்வின்
5. திருமதி. சு. சோமேஸ்வரன்
6. திருமதி. நி. சுரேஸ்

## தற்காலிக இணைப்பில் இணைந்தோர்

1. திருமதி. து. கஜேந்திரன்
2. திருமதி. து. ஞானேந்திரன்
3. திருமதி. இ. தயாகரன்

## கடமையாற்றிய அதிபர் விபரம்

- உயர்திரு. குமாரசுவாமிப் புலவர் (நிறுவுனர் 18.10.1922)
- திரு. தம்பு தர்மலிங்கம் 1969 – 1986
- திருமதி. கண்ணம்மா தர்மலிங்கம் 1986 – 1987
- திரு. கார்த்திகேசு கணேசதாசன் 1987 – 1990
- திரு. கந்தையா பழனிவேற்பிள்ளை 1991 – 1995
- திரு. திருநாவுக்கரசு கிருஸ்ணகுமார் 1996 – 2005
- திரு. கணபதிப்பிள்ளை பரமேஸ்வரன் 2006 – 2008
- திரு. செல்லையா இளங்கோ 2009 – 2011
- திரு. நடராசா கந்தவனச்செல்வன் 2011 – இன்றுவரை

## மன்றச் செயற்பாடுகள்

- ஆரம்பக் கல்வி மன்றம்
- இந்து மன்றம்
- தமிழ் மன்றம்
- ஆங்கில மன்றம்
- கணித விஞ்ஞான மன்றம்
- சமூக விஞ்ஞான மன்றம்
- கவின் கலை மன்றம்
- சுகாதாரக் கழகம்
- சுற்றாடல் கழகம் (ஆரம்பப் பிரிவு)
- அனர்த்தப் பாதுகாப்புக் கழகம்

இம்மன்றங்களினூடாகவும், கழகத்தினூடாகவும் தொழிற்பட்டு மாணவர்களுக்குப் பல்வேறு திறன் விருத்திகளையும் ஊக்குவிப்புகளையும் வழங்கி வருவதோடு தனியாள் வேறுபாட்டினையும் காணச் சந்தர்ப்பம் அளிக்கின்றது. அத்துடன் இம் மன்றங்களினூடாக மாணவர்கள் பல்வேறு போட்டிகளிலும் பங்குபற்றி பரிசில்களையும் பெற்று வருகின்றனர்.

இம்மன்றங்களினூடாக மாணவர்களுக்கு ஆக்கமும் ஊக்கமும் வழங்குகின்ற ஆசிரியர்கள் அனைவரையும் இச்சந்தர்ப்பத்தில் பாராட்டுவதோடு அவர்களுக்கு எனது நன்றியையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

## விசேட பாராட்டும் வாழ்த்துச் செய்தியும்

### திருமதி பரிமளாதேவி குருச்சந்திரநாதன்

திருமதி. ப. குருச்சந்திரநாதன் ஆசிரியர்கள் அவர்கள் எமது பாடசாலையில் தொடர்ந்து 10 வருடங்களாக ஆரம்பக்கல்வி ஆசிரியராக கடமையாற்றி வருகின்றார். இவர் ஆரம்பக்கல்வி மாணவர்களின் கற்றலுக்கு ஆக்கமும், ஊக்கமும் அளித்து வருவதோடு 2014 இல் புலமைப்பரிசில் வகுப்பை பொறுப்பேற்று தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் ஒருமாணவரை சித்தி பெற வைத்ததுடன் 6 மாணவர்களை 110 – 153 வரையிலான புள்ளிகளைப் பெறச் செய்து சித்தி பெற்றமைக்கான சான்றிதழையும் பெறவைத்தமை மிகவும் பாராட்டுக்குரியது.

அத்துடன் இவர் ஆரம்பக்கல்வி மன்றச் செயற்பாடுகளுக்கு துடிப்புடன் செயற்பட்டு மாணவர்களுக்கு நாடகங்களைப் பழக்கி மேடையேற்றியதுடன் இவ்வருடம் தனது ஆசிரியப் பணியில் 25 வருட சேவையையும் பூர்த்தி செய்கின்றமை அவரின் ஆற்றலைப் புலப்படுத்தி நிற்கிறது. எனலாம். இவ்வாறான வெள்ளி விழாவைக் கொண்டாடும் நாயகியை அவரின் ஆசிரியப் பணி மேலும் சிறக்கவும், வாழ்வில் சகல சௌபாக்கியங்களும் பெற்று வாழ எல்லாம் வல்ல ஞானவைரவப் பெருமானை வேண்டி மனதார வாழ்த்தி நிற்கிறேன்.

## பாடவிதான அடைவுகள்

ஒரு பாடசாலையின் அடைவுகளை அதிகரிக்கச் செய்வதற்கு கல்வி மேம்பாட்டிற்கான விசேட கற்றல் செயல்திட்டங்கள், ஆசிரியரின் அர்ப்பணிப்பான சேவைகள், மேலதிக வகுப்புக்கள், சிறந்த முகாமைத்துவக் கட்டமைப்பு, பாடத்திட்டமிடல், பாட முன்னாயத்தம், தரமான உள்ளீடுகளின் பயன்பாடு, செயன்முறைக் கற்பித்தல் என்பனவற்றுடன் பெற்றோர் மாணவர்களின் முழுமையான ஈடுபாடும் தொடர்ச்சியான மாணவரின் கற்றலுமே சிறந்த பெறுபேற்றைத் தரும் எனலாம்.

க.பொ.த (சா.த) பரீட்சைப் பெறுபேறு – 2013

| பாடம் | சித்தி வீதம் |
|---|---|
| சைவசமயம் | 100% |
| தமிழ் மொழி | 83% |
| ஆங்கிலம் | 08% |
| விஞ்ஞானம் | 50% |
| கணிதம் | 50% |
| வரலாறு | 59% |
| சித்திரம் | 100% |
| சங்கீதம் | 100% |
| இலக்கியநயம் - தமிழ் | 100% |
| புவியியல் | 80% |
| குடியுரிமை | 100% |
| மனைப்பொருளியல் | 100% |
| வர்த்தகம் | 50% |
| சுகாதாரம் | 71% |

தோற்றிய மாணவர் தொகை : 12

க.பொ.த. (உ.த.) தெரிவானோர் : 07

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைப் பெறுபேறு – 2014

| | |
|---|---|
| தோற்றிய மாணவர்கள் | 10 |
| சித்தி பெற்றோர் | 01 |
| 110 புள்ளிகளுக்கு மேல் பெற்றவர்கள் | 06 |

10 மாணவர்கள் பரீட்சைக்கு தோற்றி 1 மாணவர் சித்தி பெற்றும் ஏனைய மாணவர்கள் பரீட்சை அடைவுமட்டத்தை எட்டியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## பாடசாலை பௌதிகவள அபிவிருத்தியும் கரம் கொடுப்போரும்

எமது பாடசாலையின் வளர்ச்சிக்குத் தேவையான பௌதிகவள விருத்தியிலும் கல்வி வளர்ச்சியிலும் எமக்கு உறுதுணையாக நின்று உதவிக்கரம் நீட்டும் கல்வித் திணைக்களம், பாடசாலை அபிவிருத்திச் சங்கம், உள்நாட்டு வெளிநாட்டு பழைய மாணவர்கள், அபிவிருத்திக் குழு, நாடாளுமன்ற உறுப்பினர்கள், நலன் விரும்பிகள், கல்வி நம்பிக்கை நிதியம், ஓய்வு பெற்ற ஆசிரியர்கள் ஆகியோர் பாராட்டிற்கு உரியவர்கள். இவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றிகள்.

தொடர்ந்தும் வருடா வருடம் நடைபெறும் பரிசளிப்பு விழாவிற்கான நிதியினையும் அன்பளிப்புச் செய்து கொண்டிருக்கும் அவுஸ்திரேலியாவில் வசிக்கும் திரு.ந.சதீஸ்குமார் அவர்கள் இம்முறையும் பரிசளிப்பு விழாவிற்கான நிதியினையும் அன்பளிப்புச் செய்துள்ளார். அவருக்கும் அவரது குடும்பத்தினருக்கும் எனது மனமார்ந்த நன்றிகள்.

## பாடசாலைசார் அமைப்புக்கள்

1. பாடசாலை அபிவிருத்திச் சங்கம்
2. பழைய மாணவர் சங்கம்
3. கல்வி நம்பிக்கை நிதியம்

யா/ கொக்குவில் ஸ்ரீ ஞானபண்டித வித்தியாசாலை கல்வி அபிவிருத்தி நம்பிக்கை நிதியம்

| அன்பளிப்புச் செய்தோர் | ஞாபகார்த்தம் | நோக்கம் | தொகை |
|---|---|---|---|
| திரு. தேவசகாயம் நடனகுமார் | திரு. சுப்ரமணியம் இரத்தினசபாபதி | புலமைப்பரிசில் | 100,000.00 |
| திரு. வடிவேலு மயூரேசன் | திருமதி நவசக்தி வடிவேலு (தாயார்) | பரிசளிப்பு புலமைப்பரிசில் | 100,000.00 |
| திரு. ந. துஸ்யந்தனும் உறவினர்களும் | திரு. S. ஜனகன் (சகோதரன்) | கற்றல் செயற்பாடு, பரிசளிப்பு, விளையாட்டு உபகரணங்கள் கொள்வனவு | 100,000.00 |
| திரு. சண்முநாதன் சிவபாலன் | திருமதி பாக்கியரத்தினம் சண்முகநாதன் | கற்றல் செயற்பாடு, பரிசளிப்பு, விளையாட்டு | 50,000,00 |

## அன்பளிப்பு வழங்கியோர் -2014

| அன்பளிப்புச் செய்தோர் | தொகை |
|---|---|
| திரு. ந. சதீஸ்குமார் பரிசளிப்புவிழா நிதி | 50,000.00 |
| திரு. S. நவரத்தினம் | 1000.00 |
| திரு. கௌ. சுகுமார் | 1000.00 |

## நன்கொடை வழங்கியோர்
## நிலையான வைப்பில் இடப்பட்டமை

I.

| அன்பளிப்புச் செய்தோர் | ஞாபகார்த்தம் | நோக்கம் | தொகை |
|---|---|---|---|
| திரு. சி. திருச்செல்வம் | - | க.பொ.த (சா.த.) விசேடசித்தி | 25,000.00 |
| திரு. கதிர்காமர் சுப்ரமணியம் | மனைவி சுகிர்தலக்சுமி (ஆசிரியை) | க.பொ.த (சா.த.) தரம் - 10, தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சை | 50,000.00 |

II. பழைய மாணவர் – மாணவர் Sports செலவு 15,000.00

III. திரு. அப்புத்துரை குமாரசுவாமி ஞாபகார்த்தமாக மாதாந்தம் விஜய், ஜுனியர், சுட்டிகேசரி வீரகேசரி ஆகிய பத்திரிகைகளுக்காக ரூபா. 500.00 இற்கு மேற்பட்ட தொகை தொடர்ந்து அன்பளிப்புச் செய்யப்பட்டு வருகின்றது.

IV. சிவலோகநாதன் தையல்நாயகி ஞாபகார்த்தமாக 2014ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற மாணவனுக்கு துவிச்சக்கர வண்டி வழங்கப்பட்டுள்ளது.

## இணைப்பாடவிதான செயற்பாட்டில் சாதனை படைத்த மாணவர்கள்

- ஆரம்பக் கல்வி துரித கல்விச் செய்கை

    ர. சயூன்சன் - 5 ஆம் இடம் (கோட்டம்)

- சதுரங்கப்போட்டி 13 வயதுக்கு உட்பட்ட பிரிவு பாடசாலைகளுக்கிடையிலான போட்டி

    வ. தர்மிகா - 2ஆம் இடம்

    ந. இன்பரூபன் - 1ஆம் இடம்

- தமிழ்த்தினப் போட்டி கட்டுரை வரைதல்

    ச. சாந்தனா - 3ஆம் இடம் (கோட்டம்)

- சமூக விஞ்ஞானப் போட்டி

    அ. அபிசங்கர் - 1ஆம் இடம்

    சி. நிலுஜன் - 3ஆம் இடம்

    ப. பிரியவதனன் - 1ஆம் இடம் (கோட்டம்)

    - 2ஆம் இடம் (வலயம்)

    ப. மதிவதனன் - 2ஆம் இடம் (கோட்டம்)

    ஆ. காயத்ரி - 1ஆம் இடம் (கோட்டம்)

    - 2ஆம் இடம் (வலயம்)

    ர. வினிச்சன் - 1ஆம் இடம் (கோட்டம்)

    - 2ஆம் இடம் (வலயம்)

- ஆளுநர் வெற்றிக்கிண்ண சதுரங்கப் போட்டி

    வ. தர்மிகா - 4ஆம் இடம் (கோட்டம்)

- மெய்வல்லுநர் போட்டி ஈட்டி எறிதல்

    சி. சஜிகரன் - 3ஆம் இடம் (கோட்டம்)

- பட்மின்ரன் போட்டி

    15 வயது ஆண்கள் ஆணி- 4ஆம் இடம் (வலய மட்டம்)

பங்குபற்றியோர் விபரம்

pu. புரட்சிகன்

அ. கோபிநாத்

சொ. சாரங்கன்

நா. ஜெபின்சன்

ம. டிலக்சன்

உ. நிதுசன்

- பட்மின்ரன் போட்டி

19 வயது ஆண்கள் அணி- 3ஆம் இடம் (வலய மட்டம்)

பங்குபற்றியோர் விபரம்

- வி. யசிந்தன்
- வி. போஜிகன்
- சி. சுகிர்தன்
- இ. சுபேசன்
- சு. சாலுஜன்

## பாடசாலைத் தேவைகள்

1. வகுப்பறை பற்றாக்குறையைத் தீர்ப்பதற்கு இருமாடிகளைக் கொண்ட கட்டடங்களை அமைத்தல்
2. விளையாட்டுப் போட்டி, பெரு விளையாட்டுக்களை நடாத்துவதற்கான மைதானம்.
3. மூடிய வகுப்பறைகள்
4. செயற்பாட்டறைகள்
5. மேலதிக பாட வகுப்பறைகள், நடன அறை
6. ஆசிரியர் ஓய்வறை
7. சிற்றுண்டிச் சாலை

# நன்றியுரை

எமது பாடசாலையின் பரிசளிப்பு விழாவிற்கு தனது பல்வேறு வேலைப்பழுவின் மத்தியிலும் பிரதம விருந்தினராக வருகை தந்து சிறப்பித்துக் கொண்டிருக்கும் கோட்டக்கல்வி பணிப்பாளர் திரு. அ. அகிலதாஸ் அவர்களுக்கும் பரிசில்களை வழங்கி கௌரவித்த அவர் தம் பாரியார் நளினி அகிலதாஸ் அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சிறப்பு விருந்தினராக தனது சிரமங்களையும் பாராது இவ்விழாவில் கலந்து சிறப்பித்துக் கொண்டிருக்கும் எமது பாடசாலையின் முன்னாள் அதிபர் திரு. செ. இளங்கோ அவர்களுக்கும் எனது மனமுவந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எமது அழைப்பை ஏற்று கௌரவ விருந்தினராக வருகை தந்து சிறப்பித்துக் கொண்டிருக்கும் திருமதி. சோபனாதேவி மகாலிங்கம் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

எமது பாடசாலையின் செயற்பாடுகளை அறிந்து தேவையானபோது வள ஆளணியினரையும் நிதி வளங்களையும், நிர்வாகத் தேவைகளையும் வழங்கிவரும் யாழ் வலயக் கல்விப் பண்ப்பாளர் அவர்களுக்கும் ஏனைய அதிகாரிகள் அனைவருக்கும் எனது இதயம் கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும் எமது பாடசாலைத் தேவைகளை உணர்ந்து வேண்டிய பொழுதில் உதவிகளை நல்கிவரும் உள்நாட்டு, வெளிநாட்டு பழைய மாணவர்கள், நலன் விரும்பிகள், பெற்றோர்கள் மற்றும் வங்கிகள், அரச சார்பற்ற நிறுவனங்கள், உத்தியோகத்தர்கள் ஆகியோருக்கும் எனது மனப்பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்

எமது பாடசாலைச் செயற்பாடுகளில் இணைந்து செயற்பட்டு வரும் பிரதி அதிபர், ஆசிரியர்கள் கல்விசாரா ஊழியர்கள் மாணவர்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றிகள்.

மேலும் இப்பாடசாலை வளர்வதற்கு எல்லோரும் ஒருங்கிணைந்து உதவிக்கரம் நீட்டி பயன்மிக்கதொரு பாடசாலையாகத் திகழ எல்லாம் வல்ல ஞானவைரவப் பெருமானை வேண்டி இதுவரை பொறுமையாக இருந்து பரிசளிப்பு விழா அறிக்கையை அமைதியுடன் செவிமடுத்த அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றிகளைமீண்டும் ஒருமுறை தெரிவித்துக்கொள்கிறேன்.

நன்றி

# பாடசாலை வரலாற்றுச் சுருக்கம்

(ஸ்தாபித்த திகதி, ஸ்தாபித்த நோக்கம், வளர்ச்சி / சவாலான கட்டங்கள், தற்போதய சமூக எதிர்பார்ப்பு)

- ஸ்தாபகர் : உயர்திரு த. குமாரசுவாமிப்புலவர்.
- ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு : 1922.10.22
- முதலாவது தலைமை ஆசிரியர் : திரு. எஸ். வேலுப்பிள்ளை.
- ஆரம்ப மாணவர் தொகை : 50 (ஐம்பது)
- 1929 இல் பதிவு செய்யப்பட்டு முகாமைத்துவ சைவவித்தியா அபிவிருத்திச் சங்கத்திடம் கையளிக்கப்பட்டது.
- திரு.எஸ். சதாசிவம்பிள்ளை அதிபராக இருந்த காலத்தில் கிழக்குப்புறம் நிரந்தரக் கட்டடம் திரு. த. நீதிராஜா சகோதரர்களின் உதவியுடன் அமைக்கப்பட்டது.
- 1960 இல் இப்பாடசாலை அரசாங்கத்தால் சுவீகரிக்கப்பட்டது.
- தரம் 7 வரை இருந்த இப்பாடசாலை 1969 இல் திரு. த. தர்மலிங்கம் அதிபரால் தரம் 11 வரை ஆக்கப்பட்டது. (தரம் 11 பாடசாலையாகத் தரமுயர்த்தப்பட்டது)
- திரு. த. தர்மலிங்கம் அதிபர் காலத்தில் பாடசாலைக்கீதம், அடையாள முத்திரை, சீருடை, இல்ல அமைப்பு ஆகிய முக்கிய அம்சங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன.
- 1972 இல் பொன்விழா கொண்டாடப்பட்டு அதன் நினைவாக 1974 இல் புலவர் அரங்கு அமைக்கப்பட்டது.
- 1982 இல் வைரவிழா கொண்டாடப்பட்டு அதன் நினைவாக "ஞானபண்டிதம்" என்ற மலர் வெளியிடப்பட்டது.
- திரு. கா. கணேசதாசன் அதிபரான காலத்தில் ஞானவைரவர் கோவில் புனர்நிர்மாணமும், கும்பாபிஷேக விழாவும் சிறப்புற நடைபெற்றது.
- 1995 இல் திரு. கா. பழனிவேற்பிள்ளை அதிபராயிருந்த காலத்தில் இப்பாடசாலை மீளவும் இயங்கியது.
- 1996.10.01 இல் திரு. கி. கிருஷ்ணகுமார் அதிபரானார். இவர் காலத்தில் உலக வங்கியின் அனுசரணையுடன் நூலகமும், மலசலகூடங்களும் அமைக்கப்பட்டன.
- திரு. கி. கிருஷ்ணகுமார் அதிபர் காலத்தில் பவளவிழாவும் இடம்பெற்றது.
- 2006 இல் திரு. க. பரமேஸ்வரன் அதிபராகப் பொறுப்பேற்றார்.
- 2009இல் திரு.செ.இளங்கோ அதிபராக பொறுப்பேற்றார். இவர் காலத்தில் கணனி அறை, சமையல் அறை என்பன அமைக்கப்பட்டுள்ளதுடன் சிறுவர்களுக்கான விளையாட்டு உபகரணங்கள், பாடசாலை முற்றத்தில் பொருத்தப்பட்டதுடன் கட்டடங்கள் யாவும் வர்ணம் பூசி மெருகூட்டப்பட்டுள்ளது. அத்துடன் மண்டபம், வகுப்பறைகள் யாவற்றுக்கும் மின்வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. ஆரம்பக்கல்வி வகுப்பறையின் சுவர்களில் கற்றலுக்கான படங்கள் வரையப்பட்டு வர்ணமூட்டப்பட்டுள்ளது. அதிபர் அலுவலகம் சீலிங் இடப்பட்டு பாகமிடப்படடு ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது.
- 2011 இல் திரு. ந. கந்தவனச்செல்வன் அதிபராக பொறுப்பேற்று தொடர்ந்து நடத்தி வருகின்றார். இவர் காலத்தில் வலைப்பின்னல் தொடர்பு ஏற்படுத்தப்பட்டு அதனூடாக தகவல் பரிமாறப்படுகின்றன. பாடசாலை மாணவர் ஆசிரியர்களுக்கான மின் விசிறி பொருத்தப்பட்டதுடன் வெளி அரங்கு புனரமைக்கப்பட்டு வகுப்பறை ஆக்கப்பட்டுள்ளது.

## சமூக எதிர்பார்ப்பு

- மாணவர்களது கற்றல் பெறுபேறுகளின் அதிகரிப்பினை எதிர்பார்ப்பதுடன் தரம் 1, தரம் 6 இல் சேரும் மாணவர் எண்ணிக்கை அதிகரிப்பும் எதிர்பார்க்கப்படுகின்றது. பாடசாலையின் அயலில் உள்ள மாணவர்களை உள்வாங்கி அவர்களுக்கு ஏற்ற வசதிகள் கொண்ட பாடசாலையாக உருவாக்குதல்.
- மாணவர்களுக்கு உரிய நவீன கற்றல் கற்பித்தல் சாதனங்களுடன் கூடிய வினைத்திறன் மிக்க கற்றல் செயற்பாட்டை ஒழுங்கமைத்தல்.
- மாணவர்களிகள் உடல், உள ஆரோக்கியத்திற்கு அவசியமான மைதானம் ஒன்றிணைக்க கொள்வனவு செய்யதல்.
- வகுப்பறை எண்ணிக்கையை அதிகரிப்பதற்கும் விஞ்ஞான கூடம், செயற்பாட்டறை, அழகியல் அறை, பிரார்த்தனை மண்டபம் கொண்ட இருமாடிக் கட்டடம் அமைத்தல்.

## பரிசு பெறுவோர் விபரம் - 2013

| வகுப்பு | பெயர் | பாடம் |
|---|---|---|
| தரம் 1 | போ. சுஜீன் | பொதுத்தகமை, தமிழ், சமயம், கணிதம், சுற்றாடல் |
| | த. தமிழ்வாணன் | பொதுத்தகமை, தமிழ், சமயம், கணிதம், சுற்றாடல் |
| | ஜெ. சியானா | தமிழ், சமயம், கணிதம், சுற்றாடல் |
| | கி. தர்மிகன் | தமிழ், கணிதம் |
| | டா. ஜெருஷான் | சமயம், கணிதம் |
| | ஜெ. சிவகிருஷ்ணா | கணிதம் |
| | | |
| தரம் 2 | ர. விதுசன் | பொதுத்தகமை, தமிழ், சமயம், கணிதம், சுற்றாடல் |
| | க. யதுசன் | கணிதம், சுற்றாடல் |
| | | |
| தரம் 3 | சி. பிரதாஸ் | பொதுத்தகமை, தமிழ், சமயம், கணிதம், சுற்றாடல் |
| | ந. சாரங்கன் | தமிழ், சமயம், கணிதம் |
| | கு. டிலக்சன் | தமிழ், சமயம் |
| | ந. கிருஷ்ணா | தமிழ், சமயம் |
| | க. இந்துஜா | தமிழ், சமயம் |
| | அ.மோகனா | தமிழ், சமயம் |
| | அ. நிஷாயினி | தமிழ், சமயம் |
| | பி. விதுசாளினி | தமிழ், சமயம் |
| | பா. டான்சன் | சமயம் |
| | க. விதுஷா | தமிழ் |
| | உ. ரக்ஷனா | தமிழ் |
| | | |
| தரம் 4 | இ. சயூன்சன் | பொதுத்தகமை, தமிழ், சமயம், சுற்றாடல், ஆங்கிலம் |
| | சி. கௌரிபாலன் | தமிழ், சுற்றாடல், கணிதம், ஆங்கிலம். |
| | உ. ஜினேகா | தமிழ் |
| | தே. சன்சிகா | சமயம் |
| | | |
| தரம் 5 | அ. சஞ்சீபன் | தமிழ் ,கணிதம் |
| | சி. ஜிந்துசன் | தமிழ் ,கணிதம் |
| | சி. லக்சிகா | தமிழ் ,கணிதம் |
| | சி. சுகனியா | கணிதம் |
| | | |
| தரம் 6 | அ.அபிசங்கர் | தமிழ், கணிதம், விஞ்ஞானம், வரலாறு, புவியியல், குடியுரிமை, சுகாதாரம், செயன்முறை தொழிநுட்பம். |
| | ச. சாந்தனா | தமிழ், சமயம், கணிதம், வரலாறு, புவியல், குடியுரிமை, நடனம், செயன்முறை தொழிநுட்பம் |
| | இ.கீர்த்தனா | கணிதம், தமிழ் செ.மு.தொழி.நுட்பம், சுகாதாரம், புவியியல், வரலாறு, |
| | அ. பிருந்தா | தமிழ், கணிதம், குடியுரிமை, சங்கீதம், செயன்முறைத் தொழிநுட்பம். |
| | தி. கீர்த்தனா | கணிதம், குடியுரிமைக்கல்வி |
| | ஜெ. தாட்சாயினி | குடியுரிமை, செயன்முறைத் தொழிநுட்பம் |
| | பு. நிந்துஜா | குடியுரிமை |
| | | |

| | | |
|---|---|---|
| தரம் 7 | ப. பிரியவதனன் | பொதுத்தகமை, தமிழ், கணிதம், விஞ்ஞானம், சமயம், ஈங்கிலம், குடியுரிமை, சுகாதாரம், செயன்முறை தொழிநுட்பம். |
| | த. பவீசன் | குடியுரிமை, செயன்முறை தொழிநுட்பம். |
| | சீ. நிலுஜன் | குடியுரிமை, செயன்முறை தொழிநுட்பம். |
| | ர. ஶ்ரீகஜன் | குடியுரிமை, சங்கீதம் |
| | ந. ஜெபின்சன் | குடியுரிமை |
| | செ. சனுசா | குடியுரிமை, சங்கீதம் |
| | அ. திசாந்தினி | குடியுரிமை |
| | த. துஸ்மிலானி | குடியுரிமை |
| | அ. சஞ்சிகா | குடியுரிமை, தமிழ் |
| | | |
| தரம் 8 | ப. மதிவதனன் | சமயம், தமிழ், விஞ்ஞானம், புவியியல், குடியுரிமை, சுகாதாரம் |
| | ச. சுவேந்திரன் | சமயம், தமிழ், வரலாறு, புவியியல், குடியுரிமை |
| | அ. நிசாந்தினி | குடியுரிமை |
| | | |
| தரம் 9 | ஆ. காயத்ரி | பொதுத்தகமை, சமயம், தமிழ், ஆங்கிலம், கணிதம், விஞ்ஞானம், வரலாறு, புவியியல், குடியுரிமை, சங்கீதம், சுகாதாரம், செயன்முறை. |
| | அ. டிலக்சனா | சமயம், கணிதம், குடியுரிமை |
| | லெ. லதாயினி | குடியுரிமை, செயன்முறை . |
| | அ. ஷியந்தினி | சமயம், தமிழ், புவியியல், குடியுரிமை, சங்கீதம், செயன்முறை |
| | வி.யுலக்சியா | சமயம், விஞ்ஞானம், குடியுரிமை, செய்முறை. |
| | | |
| தரம் 10 | ர. வினிசன் | சமயம், சங்கீதம் |
| | த. சங்கீதா | தமிழ் |
| | | |
| தரம் 11 | செ. நிலோஜி | சமயம், தமிழ், கணிதம், சங்கீதம் |
| | இ. மீரா | தமிழ், சங்கீதம், சுகாதாரம் |

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை – 2014

**புலமைப்பரிசில் சித்தியடைந்த மாணவன்**

| இல. | மாணவர் பெயர் | புள்ளி |
|---|---|---|
| 01 | இ. சயூன்சன் | 159 |
| 100 புள்ளிகளுக்கு மேல் பெற்றவர்கள் | | |
| 02 | சி. கௌரிபாலன் | 153 |
| 03 | தே. சன்சிகா | 136 |
| 04 | த. தமிழினி | 130 |
| 05 | சு. ஜிதுசா | 127 |
| 06 | உ. ஜினோஜா | 111 |
| 07 | ஜெ. சிவியன் | 111 |

**க.பொ.த (சா.த.) பரீட்சை – 2013**

| இல. | மாணவர் பெயர் |
|---|---|
| 01 | செ. நிலோஜி |
| 02 | இ. மீரா |
| 03 | வி. தர்சிகா |
| 04 | அ. விவேக் |
| 05 | கு. குமுதினி |
| 06 | இ. நிஷாஜினி |
| 07 | ஜெ. தட்சாஜினி |
| 08 | யோ. விதுசன் |

# வித்தியாலய கீதம்

வாழிய வாழிய வாழியவே
வளர்கலைக் கூடம் வாழியவே

தாழ்வில் மாணவ ருள்ளமெலாம்
தழைவுற வோங்கி வளர்ந்திடவே
வாழ்வுப் பெருமையும் நல்லொழுக்கும்
மலரத் திருவில் உய்த்திட்டு - வாழிய

ஞான பண்டித கலைக்கூடம்
நாளும் சுற்றாங் கொழுகென்று
ஞானம் வாய்மை நல்லுரைகள்
நமக்குப் போதித் தெமையூக்கி - வாழிய

ஞான வைரவ ரருாலே
தானந் தவமோ டுயர்முயற்சி
மானம் மலர்கொக் கூர்வளர
ஆன சிறப்போ டமர்ன்னாய் - வாழிய

மனமொழி செயலின் செயலின் பண்புயர
இனமொழி சமயம் உயர்கலைகள்
கனநூ லறிவு கனிந்தோங்
தினமும் நின்னைச் சேவிப்போம் - வாழிய

காணும் கல்விக் கலைத்துறையில்
பூணும் பணியில் நாம்மிளர
மாணவர் நாங்கள் பெறுமுயர்வு
மாண்பார் செல்வி நினதேயாம். - வாழிய